©
தமிழ்நாடு அரசு
2012

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 3.20 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 30] சென்னை, புதன்கிழமை, ஆகஸ்ட் 1, 2012
ஆடி 17, திருவள்ளுவர் ஆண்டு–2043

## பகுதி IV— பிரிவு 2 இன் இணைப்பு

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2012–ஆம் ஆண்டு மே திங்கள் 24–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:–**

**சட்ட எண் 14/2012.**

***1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

**1.** (1) இந்தச் சட்டம், 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இஃது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 30/1983. **2.** 1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 89–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவிற்கான வரம்புரையில், ‘‘பதினோராண்டுகள்’’ என்று வருகின்ற சொல்லுக்குப் பதிலாக ‘‘பதினோராண்டுகள் ஆறு மாதங்கள்’’ எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும். 89–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2012–ஆம் ஆண்டு மே திங்கள் 31–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:–**

**சட்ட எண் 15/2012.**

***1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1.** (1) இந்தச் சட்டம், 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2011–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 25–ஆம் நாளன்றே நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

82–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின், 82–ஆம் பிரிவிற்குப் பின்வரும் வரம்புரையானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:– தமிழ்நாடு சட்டம் 21/1994.

"*வரம்புரை* : ஆனால், அரசினால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படக்கூடியவாறான, மாதாந்திர மதிப்பூதியமொன்று தலைவருக்கு வழங்கப்படலாம்.".

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2012–ஆம் ஆண்டு மே திங்கள் 31–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:–**

**சட்ட எண் 16/2012.**

***தமிழ்நாடு மாநிலத்திலுள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் தொடர்பான சட்டங்களை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

**பகுதி – I.**

**முன்னுரை.**

**1.** **(1)** இந்தச் சட்டம் 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**(2)** இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**பகுதி – II.**

**1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் 15/1971.

**2.** 1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் 268–ஆம் பிரிவில், 3–ஆம் உட்பிரிவில், (h) எனும் கூறுக்குப் பின்னர், பின்வரும் கூறானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:— 268–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

‘‘(hh) மாற்றுத் திறனாளிகளுக்காக பல அடுக்கு மாடிக் கட்டிடங்களிலும் பொதுக் கட்டிடங்களிலும் தனி வசதிகளுக்கான வகைமுறை ;’’.

**பகுதி – III.**

**1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் 25/1981.

**3.** 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் 268–ஆம் பிரிவில், 3–ஆம் உட்பிரிவில், (h) எனும் கூறுக்குப் பின்னர், பின்வரும் கூறானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:— 268–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

‘‘(hh) மாற்றுத் திறனாளிகளுக்காக பல அடுக்கு மாடிக் கட்டிடங்களிலும் பொதுக் கட்டிடங்களிலும் தனி வசதிகளுக்கான வகைமுறை ;’’.

**பகுதி – IV.**

**1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் V/1920.

**4.** 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 191–ஆம் பிரிவில், 3–ஆம் உட்பிரிவில், (g) எனும் கூறுக்குப் பின்னர், பின்வரும் கூறானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:- 191–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

‘‘(gg) மாற்றுத் திறனாளிகளுக்காக பல அடுக்கு மாடிக் கட்டிடங்களிலும் பொதுக் கட்டிடங்களிலும் தனி வசதிகளுக்கான வகைமுறை ;’’.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2012–ஆம் ஆண்டு மே திங்கள் 31–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:–**

**சட்ட எண் 17/2012.**

***தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் தொடர்பான சட்டங்களை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

## பகுதி–I.

### முன்னுரை.

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1.** (1) இந்தச் சட்டம் 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

## பகுதி–II.

### 1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.

138-H எனும் பிரிவிற்கான திருத்தம்.

**2.** 1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் 138–H எனும் பிரிவில், (c) எனும் கூறுக்கு, பதிலாகப் பின்வரும் கூறானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:— தமிழ்நாடு சட்டம் IV/1919.

“(c) அரசு அறுவை மருத்துவர் படிநிலைக்குக் குறையாத, அரசுப் பணியில் இருக்கும் பதிவு பெற்ற மருத்துவர் ஒருவரால் சான்றளிக்கப்பட்டவாறு, குறைபாடு எதனின் நூற்றுக்கு நாற்பது விழுக்காட்டிற்குக் குறையாமல் அத்தகைய குறைபாட்டினால் பாதிக்கப்படுகிற நபர்கள்.

***__விளக்கம்.__***–இந்தக் கூறின் நோக்கத்திற்காக “குறைபாடு” என்பது, 1995–ஆம் ஆண்டு குறைபாடு உள்ள நபர்கள் (சம வாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழுப் பங்களிப்பு) சட்டத்தின் (மையச் சட்டம் 1/1996) 2–ஆம் பிரிவின் (i) எனும் கூறின்படி குறித்தளிக்கப்பட்டுள்ள அதே பொருளையே கொண்டிருத்தல் வேண்டும் ; மற்றும் அது பேசும் திறனில் குறைபாடு உள்ள நபர்களையும் உள்ளடக்கும்.”.

## பகுதி–III.

### 1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.

169-H எனும் பிரிவிற்கான திருத்தம்.

**3.** 1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் 169–H எனும் பிரிவில், (c) எனும் கூறுக்கு, பதிலாகப் பின்வரும் கூறானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:— தமிழ்நாடு சட்டம் 15/1971.

“(c) அரசு அறுவை மருத்துவர் படிநிலைக்குக் குறையாத, அரசுப் பணியில் இருக்கும் பதிவு பெற்ற மருத்துவர் ஒருவரால் சான்றளிக்கப்பட்டவாறு, குறைபாடு எதனின் நூற்றுக்கு நாற்பது விழுக்காட்டிற்குக் குறையாமல் அத்தகைய குறைபாட்டினால் பாதிக்கப்படுகிற நபர்கள்.

***__விளக்கம்.__***–இந்தக் கூறின் நோக்கத்திற்காக “குறைபாடு” என்பது, 1995–ஆம் ஆண்டு குறைபாடு உள்ள நபர்கள் (சம வாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழுப் பங்களிப்பு) சட்டத்தின் (மையச் சட்டம் 1/1996) 2–ஆம் பிரிவின் (i) எனும் கூறின்படி குறித்தளிக்கப்பட்டுள்ள அதே பொருளையே கொண்டிருத்தல் வேண்டும் ; மற்றும் அது பேசும் திறனில் குறைபாடு உள்ள நபர்களையும் உள்ளடக்கும்.”.

## பகுதி–IV.

### 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.

169-H எனும் பிரிவிற்கான திருத்தம்.

**4.** 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் 169–H எனும் பிரிவில், (c) எனும் கூறுக்கு, பதிலாகப் பின்வரும் கூறானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:— தமிழ்நாடு சட்டம் 25/1981.

“(c) அரசு அறுவை மருத்துவர் படிநிலைக்குக் குறையாத, அரசுப் பணியில் இருக்கும் பதிவு பெற்ற மருத்துவர் ஒருவரால் சான்றளிக்கப்பட்டவாறு, குறைபாடு எதனின் நூற்றுக்கு நாற்பது விழுக்காட்டிற்குக் குறையாமல் அத்தகைய குறைபாட்டினால் பாதிக்கப்படுகிற நபர்கள்.

***விளக்கம்.***—இந்தக் கூறின் நோக்கத்திற்காக ''குறைபாடு'' என்பது, **1995—**ஆம் ஆண்டு குறைபாடு உள்ள நபர்கள் (சம வாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழுப் பங்களிப்பு) சட்டத்தின் (மையச் சட்டம் **1/1996**) **2—**ஆம் பிரிவின் (i) எனும் கூறின்படி குறித்தளிக்கப்பட்டுள்ள அதே பொருளையே கொண்டிருத்தல் வேண்டும் ; மற்றும் அது பேசும் திறனில் குறைபாடு உள்ள நபர்களையும் உள்ளடக்கும்.''.

## பகுதி—V.

## 1920—ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் V/1920.

**5.** 1920—ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 124—J எனும் பிரிவில், (c) எனும் கூறுக்கு, பதிலாகப் பின்வரும் கூறானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:— 124-J எனும் பிரிவிற்கான திருத்தம்.

''(c) அரசு அறுவை மருத்துவர் படிநிலைக்குக் குறையாத, அரசுப் பணியில் இருக்கும் பதிவு பெற்ற மருத்துவர் ஒருவரால் சான்றளிக்கப்பட்டவாறு, குறைபாடு எதனின் நூற்றுக்கு நாற்பது விழுக்காட்டிற்குக் குறையாமல் அத்தகைய குறைபாட்டினால் பாதிக்கப்படுகிற நபர்கள்.

***விளக்கம்.***—இந்தக் கூறின் நோக்கத்திற்காக ''குறைபாடு'' என்பது, **1995—**ஆம் ஆண்டு குறைபாடு உள்ள நபர்கள் (சம வாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழுப் பங்களிப்பு) சட்டத்தின் (மையச் சட்டம் **1/1996**) **2—**ஆம் பிரிவின் (i) எனும் கூறின்படி குறித்தளிக்கப்பட்டுள்ள அதே பொருளையே கொண்டிருத்தல் வேண்டும் ; மற்றும் அது பேசும் திறனில் குறைபாடு உள்ள நபர்களையும் உள்ளடக்கும்.''.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2012–ஆம் ஆண்டு மே திங்கள் 31–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:–**

**சட்ட எண் 18/2012.**

***2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1.** (1) இந்தச் சட்டம், 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரி (மூன்றாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

63–A எனும் புதிய பிரிவைப் புகுத்துதல்.

**2.** 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தில், 63–ஆம் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:— தமிழ்நாடு சட்டம் 32/2006.

**"63–A ஒரு சில நேர்வுகளில் கணக்குகள் தணிக்கை செய்யப்படுதல் வேண்டும் எனல்.— (1)** 1956–ஆம் ஆண்டு மைய விற்பனை வரிச் சட்டத்தின் (மையச் சட்டம் 74/1956) 3–ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறு ஆண்டு ஒன்றில் பூஜ்யவீத விற்பனை மற்றும் மாநிலங்களுக்கிடையேயான வாணிபம் அல்லது வணிகத்தின் போதான விற்பனை உள்ளடங்கலாக, மொத்த விற்பனைத் தொகை ஒரு கோடி ரூபாய்க்கு மேற்படுகிற பதிவு பெற்ற வணிகர் ஒவ்வொருவரும், அந்த ஆண்டினைப் பொறுத்த அளவில் அவரது கணக்குகள் கணக்கர் ஒருவரால் தணிக்கை செய்யப்படுவதற்கு ஆவன செய்தல் வேண்டும்; மற்றும் கணக்கரால் உரிய முறையில் கையெழுத்திடப்பட்ட மற்றும் சரிபார்க்கப்பட்டவாறான வகுத்துரைக்கப்பட்ட படிவத்தில் அத்தகைய தணிக்கையின் அறிக்கையொன்றினை வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய கால அளவிற்குள் வரிக்கணிப்பு அதிகார அமைப்பிற்குப் பணிந்தனுப்புதல் வேண்டும்.

*விளக்கம்:*—இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக, "கணக்கர்" என்றால், 1949–ஆம் ஆண்டு பட்டயக் கணக்கர்கள் சட்டத்தில் (மையச் சட்டம் 38/1949) வரையறை செய்யப்பட்டவாறான பட்டயக் கணக்கர் ஒருவர் அல்லது 1959–ஆம் ஆண்டு விலை மற்றும் பணிகள் மதிப்பீட்டுக் கணக்கர்கள் சட்டத்தில் (மையச் சட்டம் 23/1959) வரையறை செய்யப்பட்டவாறான விலை மதிப்பீட்டுக் கணக்கர் ஒருவர் எனப் பொருள்படும்.

(2) அத்தகைய பதிவு பெற்ற வணிகர் அவரது கணக்குகளை, (1)–ஆம் உட்பிரிவில் கோரப்பட்டவாறு வகுத்துரைக்கப்பட்ட கால அளவிற்குள் தணிக்கை செய்து கொள்ள மற்றும் அத்தகைய தணிக்கையின் அறிக்கையைப் பணிந்தனுப்பத் தவறுவாரானால், வரிக்கணிப்பு அதிகார அமைப்பு, அத்தகைய பதிவு பெற்ற வணிகருக்கு அவர்தம் தரப்பினைக் கேட்பதற்கு நியாயமான வாய்ப்பு ஒன்றை அளித்த பின்பு, மேற்சொன்ன கால அளவைப் பொறுத்த வரையில் செலுத்தத்தக்க வரி எதற்கும் கூடுதலாகப் பத்தாயிரம் ரூபாய் அளவிலான தொகையைப் பணத்தண்டமாகச் செலுத்துமாறு பதிவு பெற்ற வணிகரைப் பணிக்கலாம்.

*வரம்புரை:*—ஆனால், இந்தப் பிரிவானது மைய மற்றும் மாநில அரசுகளின் துறைகள், உள்ளாட்சி அதிகார அமைப்புகள், 1989–ஆம் ஆண்டு இருப்பூர்திப் பாதைகள் சட்டத்தின்படி (மையச் சட்டம் 24/1989) வரையறை செய்யப்பட்டவாறான இருப்பூர்திப் பாதை நிர்வாகம், தமிழ்நாடு மாநில சாலைப் போக்குவரத்துக் கழகங்கள் ஆகியவற்றிற்கு மற்றும் அரசினால் அறிவிக்கை செய்யப்படக்கூடியவாறான அது போன்ற அத்தகைய பதிவு பெற்ற வணிகர்களுக்குப் பொருந்துதல் கூடாது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.